
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**1032**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## 'மைனாரிட்டி' தி.மு.க.

**மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**

**39**

# பாதுகாப்பு அரணாக நின்ற கலைஞர்!



தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

1951-ஆம் ஆண்டு அன்றைய சட்ட அமைச்சராக இருந்த டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், ஒருதார மணம், ஜீவனாம்சம், பெண்ணுக்கும் சொத்துரிமை, வாரிசு சட்ட திருத்தம் போன்ற திருத்தங்களை உள்ளடக்கிய இந்து சட்ட மசோதாவை நாடாளுமன்றத்தில் முன்மொழிந்தார். இம்மசோதாவை காங்கிரஸுக்கு உள்ளே இருந்து இந்து மகாசபையினரும் ஆரிய சனாதனிகளும் சர்தார் பட்டேலின் தலைமையில் கண்மூடித்தனமாக எதிர்த்தனர். இம்மசோதா நிறைவேற்றப்பட்டால், ராஜினாமா செய்து விடுவதாக இராசேந்திர பிரசாத் எச்சரிக்கை விடுத்தார். இந்து மசோதா மீதான விவாதத்தையே திசைதிருப்பும் விதமாக, எல்லா மதத்தினருக்கும் சேர்த்து, பொது சிவில் சட்டம் கொண்டு வரக்கோரி பிரச்சினையைத் திசை திருப்பினர்.

“இந்து சட்ட மசோதாவை எதிர்ப்பவர்கள் ஒரே நாளில் பொதுசிவில் சட்டத்தின் தீவிர ஆதரவாளர்களாக மாறிவிட்டது எனக்கு வியப்பளிக்கிறது'' என்று அப்போதே அம்பலப்படுத்தினார் அம்பேத்கர். திருமணம் மற்றும் மணவிலக்கு பற்றிய பிரிவை மட்டும் ஒரு தனிமசோதாவாக ஆக்கிவிடலாமென்றும் மற்றவற்றைக் கைவிட்டு விடலாமென்றும் நேரு சமரச யோசனையை முன்வைத்தார். அதனை அம்பேத்கர் ஏற்றபோதிலும், மசோதாவின் அந்த ஒரு பகுதியைக்கூட நிறைவேற்ற முடியாமல் கைவிடப்பட்டது. இந்நிலையில்தான் 1951-ஆம் ஆண்டு செப்டம்பர் 27 அன்று அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார் அம்பேத்கர்.

### அம்பேத்கர் கனவை நனவாக்கிய கலைஞர்!

அப்போது நாடாளுமன்றத்தில் இருந்து வெளியே வந்த புரட்சியாளர் அம்பேத்கரிடம் பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பியபோது, *“I have been defeated today, but I am going on to assure that a day will come when a leader will emerge to fulfill my commitment”* என்று பதிலளித்தார். 1989-இல் பெண்களுக்கான சொத்துரிமைச் சட்டத்தை நிறைவேற்றி, அம்பேத்கரின் கனவை நனவாக்கினார் கலைஞர். அதுமட்டுமல்ல, ஆரியவாதிகள் இலட்சியங்கள், கனவுகளுக்கும் முட்டுக்கட்டை போட்டார் கலைஞர்.

1985-க்கு பிறகு உச்சநீதிமன்றத்தின் சில தீர்ப்புகள் பொது சிவில் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கருத்துகளை முன்வைத்தன. குறிப்பாக, ஷாபானு விவாகரத்து வழக்கு. 73 வயதான ஷாபானு திருமணமாகி 40 வருடங்கள் கழித்து, ஷரியத் சட்டப்படி மும்முறை ‘தலாக்’ சொல்லப்பட்டு விவாகரத்தானவர். அவருக்கு சட்டப்படி ‘இத்தா’ காலமான மூன்று மாதங்களுக்கு மட்டும் ஜீவனாம்சம் தரப்பட்டது. தனது எஞ்சிய ஆயுட் காலத்திற்கு வேறு ஆதரவில்லையென்பதால், குற்றவியல் சட்டம் பிரிவு 125-இன்படி தனக்கு ஜீவனாம்சம் வழங்க நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார். அவருக்கு ஜீவனாம்சம் தர உச்சநீதிமன்றம் தந்த தீர்ப்பு ஷரியத் சட்டத்திற்கு எதிரானது என விமர்சனங்கள் எழுந்தன. போராட்டங்களும் வெடித்தன. ஆனால், இதனை வாய்ப்பாக வைத்துக்கொண்டு, பொது சிவில் சட்டத்தை வலியுறுத்தினர் ஆரியவாதிகள். 1986-இல் முஸ்லிம் பெண்கள் (விவகாரத்து பாதுகாப்பு) சட்டம் என்ற ஒன்றைக் கொண்டு எல்லோரையும் அமைதிப்படுத்தினார் ராஜீவ் காந்தி.

சில வழக்குகளும் ஷரியத் சட்டத்திற்கு நெருக்கடி தரும் வகையில் வந்தன. துனிசீயா, துருக்கி போன்ற முஸ்லிம் நாடுகளில் பலதார மணத்திற்கு தடை விதிக்கப்பட்டிருப்பதையும், பாகிஸ்தான், சிங்கப்பூர், சவுத் யேமன் போன்ற நாடுகளில் ஷரியத் சட்டத்தில் மாற்றம் கொண்டு வந்திருப்பதையும் சுட்டிக்காட்டி ஷரியத் சட்டத்தில் தகுந்த மாற்றங்கள் கொண்டு வரலாம் என்ற யோசனைகளும் முற்போக்காளர்களிடம் இருந்து வந்தன.

### பா.ஜ.க.வை கட்டுப்படுத்திய கலைஞர்!

ஆனால், ஆரியவாதிகளின் நோக்கம் ஷரியத் சட்டத்தை இல்லாமல் ஆக்குவது என்பதாகவே இருந்தது. ஏனெனில், இவர்கள் முன்வைத்த பொதுசிவில் சட்டம் என்பது, இந்து தனிநபர் சட்டத்தின் அடிப்படையிலேயே இருந்தது. இது இந்திய இஸ்லாமியர்கள் மத்தியில் மேலும் ஒரு பாதுகாப்பற்ற சூழலையே ஏற்படுத்தியது. 1951-இல் நாடாளுமன்றத்தில் பொது சிவில் சட்டம் குறித்து இந்துத்துவவாதிகள் யோசனைகள் முன்வைத்தபோது அம்பேத்கர் அதை எப்படி புரிந்துகொண்டாரோ, அதுபோல, தலைவர் கலைஞரும் இதை நன்கு உணர்ந்து செயல்பட்டார்.

குறிப்பாக, ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் தேசிய ஒருமைப்பாட்டை காக்கும் வகையில் தலைவர் கலைஞர் விதித்த 3 முக்கிய நிபந்தனைகள்:

1. பாபர் மசூதியை இடித்துவிட்டு, ராமர் கோயில் கட்டக்கூடாது.

2. காஷ்மீருக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமையைப் பறிக்கக்கூடாது.

3. பொது சிவில் சட்டத்தைத் திணிக்கக் கூடாது.

> “கலைஞரின் அந்த எச்சரிக்கையைத்தான் 2024-இல் தேர்தல் அறிக்கையிலும் பொது சிவில் சட்டத்தை ஏற்க மாட்டோம் என்று உறுதியளித்தார் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.”

மூன்றுமே சிறுபான்மையினருக்கு ஆதரவான நிபந்தனைகள். குறிப்பாக, மூன்றாவது நிபந்தனையான பொது சிவில் சட்டம் கூடாது என்பது பா.ஜ.க.வின் ஆக்டோபஸ் கரங்களை எப்படி கட்டுப்படுத்தி வைத்திருந்தது என்பதைப் பார்க்க வேண்டும். உத்தரப் பிரதேசத்தின் இன்றைய முதல்வரான யோகி ஆதித்யநாத், 17.08.2000 அன்று மக்களவையில் பொது சிவில் சட்டம் குறித்து கேள்வி ஒன்றை எழுப்பினார். அதற்குப் பதிலளித்த அன்றைய சட்ட அமைச்சர் அருண் ஜெட்லி, ‘‘சிறுபான்மைச் சமூகத்தினரிடமிருந்து தேவையான முன்முயற்சிகள் வராத வரை அவர்களின் தனிப்பட்ட சட்டங்களில் தலையிடக் கூடாது என்பது அரசின் நிலையான கொள்கை ஆகும். எனவே, இது தொடர்பாக எந்த காலக் கெடுவையும் வகுக்க முடியாது” என்று பதில் அளித்தார். இதே பதிலை 29.11.2001 அன்று மீண்டும் அமைச்சர் அருண் ஜெட்லி நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். இப்படி பதில் சொல்ல காரணமாக இருந்தது தி.மு.க. விதித்த நிபந்தனைகள் என்பதை எவரும் மறுக்க முடியாது.

### பொது சிவில் சட்டம் தேவையில்லை!

சிறுபான்மையினருக்கான அரணாக தலைவர் கலைஞர் தன் வாழ்நாளின் இறுதி மூச்சு வரை திகழ்ந்தார் என்பதை பொதுசிவில் சட்டத்திலும் நிரூபித்தார். 2016-ஆம் ஆண்டு ஜூலை 4-ஆம் தேதி இது தொடர்பாக கலைஞர் வெளியிட்ட அறிக்கை எக்காலத்துக்கும் பொருந்தும் கொள்கை ஆவணம். “நம் நாட்டின் குடிமையியல் சட்டங்களில் 99 சதவிகிதம் எல்லோர்க்கும் பொதுவான சட்டங்களாகவே உள்ளன. தொழில் நடத்துதல், கொடுக்கல் வாங்கல், வாடகை, சொத்து விற்பனை உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகளில் அனைவருக்கும் பொதுவான சட்டங்களே பின்பற்றப்படுகின்றன.

முஸ்லிம்களுக்கு மட்டுமே தனியார் சட்டம் இருப்பதுபோல கருதுவது உண்மைக்கு மாறானது. இந்துக்களுக்கும், சீக்கியர்களுக்கும், இன்ன பிற பிரிவினர்களுக்கும் அவர்களுக்கென சிறப்புத் தனியார் சட்டங்கள் இந்திய அரசியல் சாசனத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. சிவில் சட்டத்தில் விவாகரத்து, தத்து எடுத்தல், சொத்துரிமை ஆகியவற்றில் மட்டும் சில வேறுபாடுகள் மத அடிப்படையில் இங்கே அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பலவிதமான மொழி, பண்பாடு மதம், சாதி எனப் பன்னெடுங் காலமாகக் கொண்டியங்கும் இந்திய மக்கள் குழுமங்களிடையே பொது சிவில் சட்டம் சாத்தியமல்ல.

நமது நாட்டில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினைகள் ஆயிரம் இருக்கும்போது; பொருளாதாரச் சீர்திருத்தங்கள், நீதித் துறைச் சீர்திருத்தங்கள் எனப் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் நாள்தோறும் பெருகி வரும் போது; பொது சிவில் சட்டம் என்னும் முன்னுரிமை இல்லாத - சிக்கலான பிரச்சினையைக் கையிலெடுக்க முயற்சிப்பது குளவிக் கூட்டிற்குள் கையை விடுவதற்கு ஒப்பானதாகும்” என்று எச்சரித்தார் கலைஞர். கலைஞரின் அந்த எச்சரிக்கையைத்தான் 2024-இல் தேர்தல் அறிக்கையிலும் பொது சிவில் சட்டத்தை ஏற்க மாட்டோம் என்று உறுதியளித்தார் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

...நீளும்

## சமூக ஜனநாயகத்தைச் சிதைக்கும் காவிக் கொள்கை!

‘நீட் தேர்வு’ என்கிற அநீதியும், ‘பொருளாதாரத்தின் பின்தங்கிய உயர்சாதியினர் இட ஒதுக்கீடு (EWS)’ என்கிற மோசடியும், இந்திய மக்கள் மீது பா.ஜ.க. நடத்திய கொடூர தாக்குதல் என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. அதன் சமீபத்தியச் சான்றாக, மருத்துவ மாணவர் சேர்க்கையில் நடந்துள்ள தில்லுமுல்லுகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் 50 ஆயிரத்துக்கும் அதிகமான முதுநிலை மருத்துவ இடங்கள் (MD, MS) உள்ளன. இந்த இடங்களுக்கு கடந்த ஆகஸ்ட் மாதம் நடந்த நீட் முதுநிலை நுழைவுத் தேர்வில் 2.4 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர். அதில் சுமார் 1.3 லட்சம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். முதல் சுற்று கலந்தாய்வு முடிவடைந்து சுமார் 27,000 மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தத் தகவல்களில், குறைந்த வருமானம் கொண்ட உயர்சாதியினர் (EWS) என சான்றிதழ் பெற்ற மாணவர்கள், நிர்வாக ஒதுக்கீட்டில் கோடிக்கணக்கில் கட்டணம் செலுத்தி சேர்ந்துள்ளது தெரிய வந்துள்ளது. EWS என்கிற பிரிவில் விண்ணப்பித்து, குறைந்த ரேங்க் வந்தவுடன், பல கோடிகள் கட்டணம் செலுத்தி என்.ஆர்.ஐ. ஒதுக்கீடு அல்லது நிர்வாக ஒதுக்கீடு வழி சேர்ந்துள்ளனர்.

ஒரு கோடி ரூபாய் செலவழித்து மருத்துவப் படிப்பில் சேரும் மாணவரை எப்படி ஏழை மாணவராக கருத முடியும் என்கிற கேள்வி எழுந்துள்ளது. இது உண்மையான ஏழை மாணவர்களின், குறிப்பாக, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களின் வாய்ப்பை மறுக்கும் மோசடி செயல் என்பது வெட்டவெளிச்சமாகிறது. இந்தியாவில் மட்டுமே இப்படியான மோசடி நடக்கிறது என மாணவர்கள் எதிர்க்குரல் எழுப்பத் தொடங்கியுள்ளனர். பா.ஜ.க.வின் கல்விக் கொள்கையும், காவிக் கொள்கையும் சமூக ஜனநாயகத்தைச் சிதைப்பவை என்பது இன்னொருமுறை நிரூபணமாகிறது.

## ஃப்ளாஷ்பேக்





மா.உதயபூபதி

### பிறந்தநாளில் தலைவரிடம் வாழ்த்து!

2015-ஆம் ஆண்டு பிப்ரவரி 9-ஆம் தேதி, எனது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை கோபாலபுரம் இல்லத்தில், தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை சந்தித்து வாழ்த்துப்பெற்றேன். என் அப்பா, பி.எஸ்.வீடு மாணிக்கம் அவர்கள் இருகூர் பேரூர் பகுதியில் கழகத்தின் தீவிரத் தொண்டர். மாவட்டப் பிரதிநிதியாக இருந்தவர். அவரோடும், அம்மா ராஜேஸ்வரி, இணையர் சங்கரி மற்றும் மகனுடன் சென்று தலைவரைச் சந்தித்தது என் குடும்பத்தினருக்கு நான் அளித்த பிறந்த நாள் பரிசாக அமைந்தது. தலைவரைக் கண்ட உற்சாகம், இந்தப் படத்தைப் பார்க்கையில் இப்போதும் ஏற்படும்.

**- மா.உதயபூபதி, கோவை - இருகூர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர், கோவை தெற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நினைவூருக

### அண்ணாவின் போர்க்குரல்!

1962-ஆம் ஆண்டு மார்ச் 20-ஆம் தேதி, மாநிலங்களவைக்கு பேரறிஞர் அண்ணா தேர்ந்தெடுக்கப்பட்டார். மே 1-ஆம் தேதி, நாடாளுமன்றத்தில் தெள்ளு தமிழில் முழங்கியது பேரறிஞர் அண்ணாவின் போர்க்குரல்!

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131